 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) முன்னோடிப் பரீட்சை - 2019 ஏப்ரல்

**General Certificate of Education (Adv. Level) Pilot Examination - 2019 April**

| பொறியியல் தொழினுட்பவியல் - I<br>**Engineering Technology - I** | **65 T I** | இரண்டு மணித்தியாளம்<br>**Two Hours** |
|---|---|---|

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக**.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. *1* தொடக்கம் *50* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.
5. ஒவ்வொரு வினாவிற்க்கும் ஒரு புள்ளி வீதம் மொத்தப்புள்ளிகள் *50* ஆகும்.
6. **கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது**

**01.** பல்மானி ஒன்றின் செம்மையை அறிவதற்கு கவனம் செலுத்தவேண்டிய அலகு யாது?

1) mAh  2) V  3) Ω  4) k Ω/V  5) kWh

**02.** பின்வரும் அளவீட்டு உபகரணங்கள், பயன்பாடு தொடர்பான கூற்றுகளில் சரியானது அல்லது சரியானவை?

A - மூலைமட்டமும் வழுக்குதரங்கும் (Beval Gage ) – மரக்குற்றியிலும் பலகையிலும் தேவையான அளவிடை, கோணங்களை வரைதல்


B - முகப்பு வில்லைச் சோதனைக் காட்டி (Dial Gauge) – தேய்மானத்தினைப் பரீட்சித்தல்


C - ஜென்னி இடுக்கி – விளிம்புக்கு சமாந்தரமாக கோடு வரைதல்

1) A மட்டும் சரியானது  2) B மட்டும் சரியானது  3) A,B மட்டும் சரியானது


4) B,C மட்டும் சரியானது  5) A,B,C யாவும் சரியானது

**03.** அருகில் காட்டப்பட்டுள்ள சமவளவெறிய உருவை திசை A இன் வழியே நோக்கும் போது புலப்படும் சரியான நிமிர்வரையெறியத் தோற்றம்





(1)




(2)



(3)



(4)



(5)

PAPERMASTER.LK

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**04.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக?

A – பணியாளருக்குச் சிகிச்சையளிப்பதற்கு ஏற்படும் செலவு

B – பணியாளர்கள் மற்றும் உற்பத்திச் செயன்முறையுடன் தொடர்பான ஏனைய பணியாளர்களின் இழக்கப்பட்ட நேரத்திற்கான கொடுப்பனவுக்குரிய செலவு

C – குணமடைய எடுக்கும் காலத்தில் வழங்கப்பட்ட சம்பளம்

D – விபத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள இயலாமை தொடர்பாக வழங்கப்பட வேண்டிய நட்டஈடு

இவற்றுள் கைத்தொழில் சார்ந்த விபத்துக்களுடன் தொடர்புடைய செலவுகள் ஆவன

1) A,B,C மட்டும் சரி 2) A,B,D மட்டும் சரி 3) A,C,D மட்டும் சரி

4) B,C,D யும் சரி 5) A,B,C,D யாவும் சரி

**05.** பழக்கடை உரிமையாளர் ஒருவர் ஆதன விற்பனை, குத்தகைக்கு விடல், வாடகைக்கு வழங்கல் என்பன தொடர்பாக பேரம் பேசும் தரகராகவும் செயலாற்றுகிறார் அவரது முயற்சியான்மை இயல்புகளை பின்வரும் எந்தச் செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

A – தகுதியுள்ள வாடிக்கையாளர்கள், சமகால ஆதனத்தரகர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்வதற்கு அவரது செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தல்

B – பழங்களின் விற்பனைக்கு பயிற்றப்படட விற்பனை உதவியாளரைப் பயன்படுத்தல்


C – அண்மையில் நடைபெற்ற ஆதன விற்பனை, குத்தகைக்குவிடல், வாடகைக்கு வழங்கல் ஆகியவற்றுக்குரிய தகவல்கள் அடங்கிய தரவுத்தளத்தைப் பேணுதல்






D – ஆதன விபரங்கள், வாடிக்கையாளர் விபரங்கள் ஆகியவற்றைக் கொண்ட அறிவித்தல் பலகையை காட்சிப்படுத்தல்

1) A,B,C மட்டும் சரி 2) A,B,D மட்டும் சரி 3) A,C,D மட்டும் சரி

4) B,C,D யும் சரி 5) A,B,C,D யாவும் சரி

**06.** ஒரு வேலைப்பகுதியின் தட்டையான மேற்பரப்பின் மேல் முடிக்கும் செயற்பாட்டை குறித்துக்காட்டும் குறியீடு உருவில் காட்டப்பட்டுள்ளது ( உற்பத்தி வரைதல் ) இக்குறியீட்டினால் காட்டப்படும் முடிப்பை சரியாகக் காட்டும் படம்




1)  2)  3)  4)  5) 

**07.** கட்டட அமைப்புக் கட்டளைச் சட்டப்படி வதிவிடங்கள், ஹோட்டல்கள், விடுதிகள், விருந்தோம்பும் இல்லங்கள், பொதுமக்கள் கூடும் கட்டடங்கள் ஆகியவற்றிற்க்குக் கீழ்பட வேண்டிய நிலப்பரப்புப் பின்னம்

1) $66\frac{1}{3}\%$ 2) $66\ \frac{2}{3}\%$ 3) $36\ \frac{2}{3}\%$ 4) $63\frac{1}{3}\%$ 5) $62\frac{1}{2}\ \%$

**08.** கனியச்சிட்டைகளைப் பயன்படுத்தி அலகு விலை தீர்மானிக்கப்படும் பொழுது பயன்படுத்தும் விடயங்கள்

A- பொருட்களின் விலை

B- தொழிலாளர் கூலி

C- மேந்தலைக் கிரயம்

D- இயந்திரங்கள், கருவிகள் விலை

E- இலாபம்

PAPERMASTER.LK

1) A,B,C 2) B,C,D 3) C,D,E 4) B,C,D,E 5) A,B,C,D,E

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**09.** காற்றேற்றத்தின் மூலம் நீருடன் வளி நன்றாகக் கலக்க இடமளிக்கப்படுகின்றது. இதற்காக பல்வேறு காற்றேற்ற முறைகள் பயன்படுகின்றன.
இதில் சரியானவை.

A- புவியீர்ப்பு அல்லது படிமுறைக் காற்றேற்றம்

B- விசிறிக் காற்றேற்றம்

C- பொறிமுறைக் காற்றேற்றம்

*1)* A மட்டும் *2)* A,B மட்டும் *3)* A,C மட்டும்

*2)* B,C மட்டும் *5)* A,B,C யாவும்

**10.** பொதுவாக ஒரு செவ்வகக் கொங்கிறீற் தகடு ஒன்றிற்கு மீள் வலுவூட்டல் கம்பிகள் இடப்படும் முறையில்

A- குறுகிய அகல்வின் திசையில் பிரதான உருக்குக் கம்பிகளைப் பரவி அதன்மேல் நீள அகல்வின் திசையில் பங்கீட்டு கம்பிகளைப் இடலாம்.


B- நீள அகல்வின் திசையில் பங்கீட்டுக் கம்பிகளைப் பரவி அதன்மேல் குறுகிய அகல்வின் திசையில் பிரதான கம்பிகளை பரவலாம்.

C- தகடுகளுக்கு மீள்வலுவூட்டும்பொழுது நெருக்கல்த்தகைப்பு, இழுவைத்தகைப்பு கவனிக்கப்பட வேண்டும்

1) A மட்டும் சரி *2)* B மட்டும் சரி *3)* C மட்டும் சரி

4) B,C யும் சரி *5)* A,B யும் சரி

**11.** விட்டக்கல் (லிண்டல்) ஒன்று வலுவூட்டல் கொங்கிறீற்றினால் வார்க்கப்படுகின்றது.




A- இதற்கு இழுவை வலுவூட்டல் கம்பிகள் விட்டக்கல்லின் மத்தியில் சமாந்தரமாக வைக்கப்படும்.

B- விட்டக்கல் சுவரில் எளிய ஆதாரமாக அமையலாம்.

C- விட்டக்கல் முன்பு வார்க்கப்பட்டோ, அல்லது அதே இடத்தில் வார்த்தோ அமைக்கலாம்.

D- விட்டக்கல் சுமையை ஏற்று அயலில் உள்ள சுவருக்கு கடத்துகின்றது.
இவற்றில் சரியானவை.

1) A,B *2)* B,C *3)* C,D *4)* B,C,D *5)* A,B,C,D

**12.** பின்வருவன ஈரம்புகாவரி மட்டம் பற்றி விபரிக்கின்றன.
இவற்றுள் சரியாவை

A- தரைத்தள சுவரின் ஊடாக மயிர்துளைத் தன்மை காரணமாக சுவருக்கு ஈரம் செல்கின்றது.

B- ஈரம் புகாவரி மட்டம் பொதுவாக நிலமட்டத்தில் இருந்து 150 mm உயரத்தில் இருக்கலாம்.

C- ஈரம்புகாவரி அமைப்பதால் கறையான், எறும்பு போன்றனவற்றின் நகர்வு தடுக்கப்படும்.

D- ஈரம் புகாவரியில் தார் பூசுவதற்கு பதிலாக செம்பு, அலுமினியம் தகடுகளையும் பொருத்தலாம்.

1) A,B,C *2)* B,C,D *3)* A,C,D 4) A,B,D *5)* A,B,C,D யாவும்

PAPERMASTER.LK

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**13.** கட்டடம் ஒன்றின் கணியச்சிட்டை தயாரிப்பதற்கான சில வேலை உருப்படிகளும் அவற்றின் அளவீட்டு அலகுகளும் பின்வருமாறு

A- சுவர்களில் சாந்திடல் - $m^2$

B- செங்கற் சுவரை அமைத்தல் - $m^2$


C- அத்திவார அகழி தோண்டுதல் - $m^2$

D- ஈரம்புகாவரி அமைத்தல் - $m^2$

SLS – 573 – 1999 க்கு அமைவாக சரியான அளவீட்டு முறைகள் அல்லாத அளவீடு

1) A  2) B  3) C  4) D  5) எதுவுமன்று

**14.** ஒளியையும் காற்றோட்டத்தையும் பெற பயன்படும் யன்னல் ஒரு நியம ஒளித்தளத்திற்கு திறந்து இருக்க வேண்டும் அதற்கான கோணம்




*1) 44.5°*  *2) 60.5°*  *3) 36.5°*

*4) 80.0°*  *5) 50.5°*

**15.** M20 என்பது கொங்கிறீற்றின் தரம் ஆகும் இதற்கான கொங்கிறீற் கலவையின மிகப் பொருத்தமான விகிதம் யாது?

1) 1:3:6  2) 1:2:4  3) 1:1 ½ :3  4) 1:4:8  5) 1:2 ½ : 5

**16.** தீந்தையில் மூலம், வர்ணம், ஐதாக்கி, உலர்த்தி என்பன காணப்படுகின்றன இதில் சரியானது

A- ஐதாக்கி பூசப்படும் மேற்பரப்பில் சீராக பரவ உதவுகின்றது.

B- மூலம் அடிப்படை பொருளாக பயன்படுகின்றது.

C- மூலம் காவியோடு சேர்ந்து பூசப்படும் பரப்புக்கு சிறந்த மூடுதிறனைக் கொடுக்கின்றது.

D- உலர்த்தி தீந்தை உலருவதற்கு உதவுகின்றது.

1) A,B,C மட்டும்  2) B,C,D மட்டும்  3) A,C,D மட்டும்

4) A,B,D மட்டும்  5) A,B,C,D யாவும்

**17.** மரத்தாலான கதவுநிலையை சுவரில் பொருத்தும் நுட்பச்செயன்முறை நிகழ்வுகளில் சரியானவை?

A- கதவு நிலையின் வன்பிடி கதவு நிலையின் தம்பத்துடன் சேர்ந்து சுவரில் பொருத்தப்படுகின்றது.

B- கதவு நிலையின் கொம்புகள் சுவரில் பொருத்தப்படுகின்றன.

C- உந்துகல், முளையாணி, தம்பத்தின் அடியில் தளத்தில் காணப்படும்.

D- விட்டக்கல் (லின்டல்) கதவு நிலையை பாதுகாக்கின்றது.

1) A,B மட்டும்  2) B,C மட்டும்  3) A,B,C மட்டும்

2) B,C,D மட்டும்  5) A,B,C,D யாவும்

PAPERMASTER.LK

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**18.** நகர அபிவிருத்திச் சட்டப்படி அதிகார சபையினால் கட்டடத்திறந்தவெளி அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| **பகுதி** | **இயற்கை ஒளி, காற்றோட்டம் பெற வெளியின் பரப்பு அளவு அறையின் பரப்பளவின்** | **திறக்கத்தக்க பகுதி** |
|---|---|---|
| குளியல் அறையும் சேர்ந்த மலசலகூடமும் | $\frac{1}{10}$ | 100% |
| வாழ்க்கை அறை, படுக்கை அறைகள், சாப்பாட்டு அறைகள் | $\frac{1}{7}$ | 50% |

பின்வரும் கூற்றுக்களில் எவை உண்மையானவை.

A- 2m x 1m உள்பரிமாணங்களை உடைய குளிப்பறை சேர்ந்த மலசலகூடம் 0.2 $m^2$ திறந்த வெளி இருத்தல் வேண்டும்.

B- குளிப்பறைகள், மலசலகூடங்களுக்கு தேவையான பருமனில் விசிறிப் பலகணி மூலம் காற்றோட்டம் வெளிச்சம் வழங்கலாம்.

C- படுக்கை அறைகளுக்கு உட்தளப்பரப்பின் $\frac{1}{7}$ தடைப்படாத கதவுகளும் யன்னல்களும் அடங்கும்.


D- படுக்கை அறைகளுக்கு உட்தளப்பரப்பின் $\frac{1}{7}$ என்றும் தடைப்படாத பரப்பளவில் யன்னல்கள் மட்டும் அடங்குகின்றன.

1) A,B,C ஆகியன　　2) A,B,D ஆகியன　　3) A,C,D ஆகியன
4) B,C,D ஆகியன　　5) A,B,C,D ஆகியன

**19.** **"காய்ச்சியிணைத்தல் என்பது உலோகங்களைக் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பமேற்றல், பகுதியாக உருக்குதல், இணைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய செயற்பாடாகும்"** பின்வருவனவற்றில் காய்ச்சியிணைக்கத்தக்க திரவியங்களை மாத்திரம் கொண்ட விடைத்தொகுதி

1) உருக்கு, அலுமினியம்　　2) ஈயம், நாகம்　　3) அலுமினியம், தகரம்
4) நாகம், உருக்கு　　5) உருக்கு, ஈயம்

**20.** நுட்ப்பர் ஒருவர் திருகாணியினைச் செலுத்துவதற்கு திருகாணிச் செலுத்தியைப் பயன்படுத்திய சில சந்தர்ப்பங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளது. இதில் மிகச் சரியான சந்தர்ப்பங்களைக் கொண்ட விடைத் தொகுதி.





1) A,B மட்டும்　　2) B,C மட்டும்　　3) A உம், C உம்
4) B மட்டும்　　5) E மட்டும்

PAPERMASTER.LK

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**21.** உருவில் காட்டப்பட்டுள்ள வாகனக் குடத்தடுப்பில் இலக்கமிடப்பட்டுள்ள பாகங்கள் முறையே குறிப்பது.




1) தடுப்பு இலாடம், பின்வாங்கும் வில், சீராக்கிச் சக்கரம் (Adjuster Wheel), பிடிப்பு வில் (Hold Down Spring)
2) பின்வாங்கும் வில், பிடிப்பு வில் (Hold Down Spring) , தடுப்பு இலாடம், சீராக்கிச் சக்கரம் (Adjuster Wheel)
3) தடுப்பு இலாடம், சீராக்கிச் சக்கரம் (Adjuster Wheel), பிடிப்பு வில் (Hold Down Spring), பின்வாங்கும் வில்
4) தடுப்பு இலாடம், சக்கர உருளை, நட்சத்திரச் சக்கரம், சீராக்கும் வில்
5) குடம், தடுப்பு இலாடம், நட்சத்திரச் சக்கரம், உருளை

**22.** வால்வு இளக்கத்தைச் சீர் செய்யும் போது வால்வுகள் இரண்டும் காணப்பட வேண்டிய மிகச் சரியான நிலை?

1) உள்ளீட்டு வால்வு திறந்தும் வெளியீட்டு வால்வு மூடியும் காணப்பட வேண்டும்
2) வெளியீட்டு வால்வு திறந்தும் உள்ளீட்டு வால்வு மூடியும் காணப்பட வேண்டும்
3) இரண்டு வால்வுகளும் முழுமையாகத் திறந்த நிலையில் காணப்பட வேண்டும்
4) இரண்டு வால்வுகளும் பகுதியாகத் திறந்த நிலையில் காணப்பட வேண்டும்
5) இரண்டு வால்வுகளும் மூடிய நிலையில் காணப்பட வேண்டும்

**23.** 1,3,4,2 எரிதல் ஒழுங்கு உடைய ஒரு இயந்திரத்தின், இரண்டாவது முசலம் ஆனது உள்ளீட்டு அடிப்பை மேற்கொள்ளும் போது மூன்றாவது முசலம் ஆனது என்ன அடிப்பில் இருக்கும்?

1) உள்ளீட்டு அடிப்பு
2) சக்தி அடிப்பு
3) அழுக்கு அடிப்பு
4) வெளியேற்றல் அடிப்பு
5) மேற்கூறிய யாவும் அல்ல

**24.** முசல வளையம் ஒன்றின் தொழிற்பாடாக அமைவது

A) அமுக்கத்தைக் கசிய விடாது இருத்தல்
B) எண்ணையை வழித்து இழுத்தல்
C) எண்ணெயைத் தகன அறைக்குக் கடத்துதல்
D) அமுக்கத்தைக் கசிய விடல்
E) எண்ணெயைத் தகன அறைக்குச் செல்லாது தடுத்தல்

1) A,D,E  2) A,B,D  3) A,B,E
4) A,D,C  5) A,B,C,D

**25.** இயந்திரத்தின் வெப்பநிலை சடுதியாக அதிகரிப்பதற்கான காரணமாக இல்லாதது எது?

1) நீர்ப் பம்பியின் பட்டி அறுந்து போதல்
2) நீர்க்குழாயில் ஒழுக்கு இருத்தல்
3) கதிர்த்தியின் வளியிடை அடைத்து இருத்தல்
4) மின்விசிறி தொடர்ச்சியாக வேகமாக இயங்குதல்
5) வெப்ப பரிபாலன வால்வு தொழிற்படாது போதல்

PAPERMASTER.LK

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**26.** வெளியேற்றத் தொகுதி ஊடாக மசகிடல் எண்ணை ஆனது, வெளிவருவதற்கான காரணமாக அமைவது?

1) எண்ணெய் பம்பியில் (Oil Pump) அதிகளவான அமுக்கம்
2) எண்ணெய் வடிப்பானில் ஏற்பட்ட கசிவு
3) தீப்பொறிச் செருகியில் ஏற்பட்ட கசிவு
4) அழல் ஏற்றில் (Turbo Charger) ஏற்பட்ட கசிவு
5) காபனாக்கியில் ஏற்பட்ட கசிவு

**27.** கியர் பெட்டி ஒன்றில் முதலாவது கியர் இல் இருந்து இரண்டாவது கியரிற்கு மாற்றும் போது முறுக்கத்தில் ஏற்படும் மாற்றம் ஆனது?

1) அதிகரிக்கிறது 2) குறைகிறது 3) மாற்றமடையாது
4) கூடிக்குறைகிறது 5) கூறமுடியாது

**28.** உருளை ஒன்றின் கனவளவு 1080cm$^3$ ஆகவும் அதன் இளக்கக் கனவளவு 120cm$^3$ ஆகவும் உடைய இயந்திரம் ஒன்றின் நெருக்கல் விகதம் யாது?

1) 9 : 1 2) 8 : 1 3) 10 : 1 4) 11 : 1 5) 11 : 4

**29.** ஒரு நான்கு அடிப்பு நான்கு உருளை இயந்திரம் ஒன்றானது 1500 rpm உடன் 03 நிமிடங்கள் இயங்கும் போது, அந்நேர இடைவெளியில் ஏற்பட்ட சக்தி அடிப்புக்களின் எண்ணிக்கை யாது?

1) 24000 2) 12000 3) 9000 4) 4500 5) 6000

**30.** நான்கு அடிப்பு இயந்திரம் ஒன்று 95Nm பயப்பு முறுக்கத்தை (Output Torque) வெளிப்படுத்தியவாறு 3000 rpm இல் சுழல்கிறது அவ் இயந்திரத்தினால் பிறப்பிக்கப்படும் வலு யாது?

1) 3.15$\pi$ kW 2) 9.5 kW 3) 9.5$\pi$ kW 4) 95 kW 5) 31.5 kW

**31.** உள்ளீட்டு வால்பு ஆனது TDC இற்கு முன்னதாக 12° திறந்து BDC இற்கு பின்னதாக 14° மூடுகிறது வெளியீட்டு வால்பு BDC இற்கு முன்னாக 10° திறந்து DC பின்னதாக 10° மூடுகிறது எனில், Valve Over Lap இன் போது Crank Shaft திரும்பவேண்டிய கோணத்தைக் கான்க?

1) 12° 2) 14° 3) 22° 4) 32° 5) 202°

**32.** நவீன தன்னியக்க ஊடுகடத்தல் முறைமைகளில் **பாயி இணைப்பு** அல்லது முறுக்கமாற்றி தானியங்கியானது பிடியாக (Clutch) பயன்படும்

A. முறுக்கமாற்றியானது முறுக்கப் பொருக்கல் தொழிற்பாட்டைக் கொண்டு இருக்கும்
B. சில சந்தர்ப்பங்களில் முறுக்கமாற்றியானது படிமுறை கொண்டிராத கியர்ப் பெட்டியாகத் தொழிற்படும்.
C. முறுக்க மாற்றியில் பல உராய்வுத் தட்டுக்கள் காணப்படும்
D. முறுக்கமாற்றியினால் வலு ஊடுகடத்தப்பட முடியும்

இவற்றுள் சரியான கூற்றுக்கள் ஆவன

1) A,B,C மட்டும் சரியானது 2) A,B,D மட்டும் சரியாது 3) A,C,D மட்டும் சரியாது
4) B,C,D மட்டும் சரியானது 5) A,B,C,D யாவும் சரியானது

PAPERMASTER.LK

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**33.** நிலஅளவையின் போது தனிஅமைவு, சார் அமைவு பற்றிய கூற்றுக்களில் சரியானது?

A. மத்திய கோட்டினை x அச்சாகவும், கிறின்விச் கோட்டினை y அச்சாகவும் கொண்ட ஆள்கூற்றுத்தளத்தில் குறிக்கப்படுவது தனியமைவு ஆகும்

B. சாரமைவு என்பது நாட்டுக்குரிய மூலப்புள்ளி தெரிவு செய்யப்பட்டு, அதற்காக தெரிவு செய்யப்பட்ட ஆள்கூற்றுத் தளத்தில் குறிக்கப்படும்

C. GPS என்பது சாரமைவினை அடிப்படையாக கொண்டு அளவிடப்படும் அளவையாகும்.

1) A மட்டும் சரியானது 2) B மட்டும் சரியாது 3) C மட்டும் சரியாது
4) A,B மட்டும் சரியானது 5) A,B,C யாவும் சரியானது

**34.** ஓர் தியோடலைற்று அளவிடையானது புள்ளி A இல் வடக்கு ஆள்கூறு , கிழக்கு ஆள்கூறு (1000 m , 1000 m) இல் இருந்து அளவிடத் தொடங்கப்படுகின்றது. B,C திசைகோள்கள், நீளங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது (Cos30° = 0.86, Sin 30° = 0.500, Sin 45° = 0.70, Cos 45° = 0.70)

| புள்ளி | நீளம் (m) | திசைகோள் |
|---|---|---|
| B | 200 | 030 |
| C | 100 | 045 |

புள்ளி C இன் திசைகோள் யாது?


1) 1050, 1172 2) 1242,1170 3) 1120, 1242
4) 1172,1050 5) 1120,1172

**35.** மட்டமாக்கல் நிலஅளவை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் தவறானது?

1) ஓர் இடத்தில் உபகரண உயரம் 102.500 ஆகவும் இடைநோக்கு வாசிப்பு 1.500 ஆகவும் காணப்படுகின்றது இவ் அளவைத்தானத்தில் ஒடுக்கியமட்டம் 101.000 ஆகும்
2) ஓர் அளவைத்தானத்தின் ஒடுக்கியமட்டம் எப்பொழுதும் நேர்ப்பெறுமானத்தினையே எடுக்கும்.
3) குறித்த ஒரு அளவைத்தானத்தில் ஒடுக்கியமட்டம் 25.000 காணப்படும் பொழுது அவ் அளவைத் தானத்தில் முன்னோக்கு வாசிப்பு 2.000 ஆகவும் பின்நோக்கு வாசிப்பு 3.000 ஆகவும் காணப்படுகின்றது. புதிய உபகரண உயரம் 28.000 ஆகும்.
4) ஓர் இடத்தில் கருவியை வைத்த ஒரு முன்னோக்கு வாசிப்பும், ஒரு பின்நோக்கு வாசிப்பும், பல இடைநோக்கு வாசிப்புக்கள் பெறலாம்.
5) சாராசரி கடல்மட்டத்தில் இருந்து பார்வைக்கோட்டிற்கான உயரம் உபகரண உயரமாகும்சூ

**36.** உருவில் காட்டப்பட்டுள்ள சுற்றில் உடுத் (Star) தொடுப்பு முக்கலைச் சுமையின் கலை அழுத்தமும் (Vph), வழி மின் ஓட்டமும் ($I_L$) முறையே,

1) 230V, 115A 2) 115A, 230V 3) 400V, 200A
4) 200A, 400V 5) கூறமுடியாது




PAPERMASTER.LK

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]


**37.** இலங்கையின் நியம தனி அவத்தை அழுத்தம், முக்கலை வழி அழுத்தம் என்பன முறையாக அமைவது எது?

1) 230V, 230V  2) 400V, 230V  3) 400V, 400V  4) 230V, 400V  5) 400V, 50Hz

**38.** மீதியோட்ட சுற்றுடைப்பான் (RCCB) ஒன்றின் உணர்திறன் மின் ஓட்டமானது

1) 300mA  2) 0.03A  3) 30A  4) 100mA  5) 230A

**39.** தரப்பட்டுள்ள உருவில் வலுக்காரணி 0.8 ($\cos\emptyset = 0.8$) எனில் சுற்றில் மின்ஓட்டம் (I) யாது?





1) 16A  2) 32A  3) 24A
4) 30A  5) தரவு போதாது.

**40.** புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றில் 5A குதை ஒன்றினூடாக மின்னழுத்தி ஒன்றை இணைத்து தொழிற்படுத்தும் போது சிறு சுற்றுடைப்பான (MCB) தொழிற்பட்டு குறித்த தொகுதியில் இணைக்கப்பட்டுள்ள ஏனைய சுமைகளையும் துண்டித்து விடுகிறது. எனினும் குறித்த மின்னழுத்தி சுற்றில் இணைக்காத போது ஏணைய சுமைகள் தொழிற்படுகின்றது. குறித்த மின்னழுத்தியை வேறு 5A குதையுடன் இணைத்து தொழிற்படுத்தும் போது அவ்வாறு நிகழாமல் மின்னழுத்தி தொழிற்படுகிறது. எனவே குறித்த MCB தொழில்படுவதற்கு ஏதுவான காரணமாக அமைவது.

1) குறித்த MCB பழுதடைந்துள்ளது
2) குறித்த 5A குதை பழுதடைந்துள்ளது.
3) குறித்த MCB இல் இணைக்கப்பட்டுள்ள சுமைகள் போதுமானதாக காணப்படுவதால் மேலதிக சுமை இணைக்கப்படும் போது தொழில்படுகிறது.
4) வடங்களில் ஏற்பட்டுள்ள மின்னோட்ட ஒழுக்கு காரணமாக MCB தொழிற்படுகிறது.
5) எதுவும் கூற முடியாது.

**41.** ஒரு நேரோட்ட (DC) பக்க சுற்றிய மோட்டாரின் ஆமேச்சர் மின் ஓட்டம் (Ia) இற்கு எதிரே வேகம் (N) இன் மாறல் தொடர்பான சரியான வரைபாக அமைவது.




**42.** நேரோட்ட தொடர் சுற்றிய மோட்டார்கள் சுமை அற்ற நிலையில் அல்லது குறைந்த சுமையில் தொழில்படுத்தாமைக்கு காரணமாக அமைவது.

1) திறன் மிக குறைவாக காணப்படல்
2) குறைந்த சுமையில் வலு வீணடிக்கப்படுதல்
3) உயர் வேகத்துடன் தொழில்படுவதால் பொறிமுறைப் பழுது ஏற்படுதல்
4) உயர் மின் ஓட்டத்தை எடுத்தல்
5) மோட்டாரில் கூடுதலான அழுத்த வீழ்ச்சி ஏற்படல்

PAPERMASTER.LK

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**43.** பின்வருவனவற்றில் வலு இருவாயி தொடர்பாக தவறான கூற்றாக அமைவது.

1) P,N மாசாக்க குறைகடத்திகள் கொண்டு உருவாக்கப்பட்டது
2) ஒரு PN சந்தி மாத்திரம் காணப்படும்
3) நேரோட்டதினை ஆடலோட்டமாக மாற்றப் பயன்படும்.
4) அழுத்தம் மாறாது பேணும் சுற்றில் பயன்படுத்தப்படும்
5) முற்சாருகையில் தொழிற்படும்.

**44.** சந்திப்புல விளைவு மூவாயி (JFET), இரு முனைவுச் சந்தி மூவாயி (BJT) ஆகியன தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது / தவறானவை

A- JFET மூவாயியில் ஒரு சந்தியும் BJT மூவாயியில் இரு சந்தியும் காணப்படும்.


B- JFET, BJT இரண்டு மூவாயிகளும் P,N மாசாக்க குறைகடத்திகளால் உருவாக்கப்பட்டவை ஆகும்.

C- JFET ஆனது மின்னழுத்த செயற்பாட்டு உத்திமுறையிலும் BJT ஆனது மின்னோட்ட செயற்பாட்டு உத்திமுறையிலும் தொழில்படும்.

D- JFET இல் $I_D$ ஐ பூச்சியமாக்குவதற்கு கதவத்துக்கும் மூலத்திற்கும் இடையில் மின்னழுத்தம் தேவைப்படும் ($V_{GS}$), BJT இல் Ic ஐ பூச்சியமாக்குவதற்கு தளத்துக்கும் காலிக்கும் இடையில் மின்னழுத்தம் ($V_{BE}$) தேவைப்படுவதில்லை.


1) A,B  2) A,B,C  3) A,B,C,D  4) A,D  5) எவையும் அல்ல

**45.** தரப்பட்டுள்ள சுற்றில் மூவாயிக்கு கோடல் அளிக்கப்பட்டுள்ள முறையும், சுற்றில் மூவாயியின் நயமும் முறையே,





1) பின்னூட்டல் கோடல், நயம் 100
2) பின்னூட்டல் கோடல், நயம் $\alpha = 100$
3) நிரந்தர கோடல், நயம் $\beta = 100$
4) அழுத்தப் பகுப்பு கோடல், நயம் 100
5) பின்னூட்டல் கோடல், நயம் $\gamma = 100$


**46.** பூலக்கோவை F= A⊕B ற்கு சமவலுவாக அமைவது





A)




B)




C)





D)

1) A,B ஆகியன  2) B மாத்திரம்  3) C மாத்திரம்  4) D மாத்திரம்  5) A,B,C ஆகியன

PAPERMASTER.LK

முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

**47.** உருவில் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டு விரியலாக்கிச் சுற்றின் வகையும் அதன் நயம் (A) ஆகவும் அமைவது






1) $1+\frac{R_2}{R_1}$ , நேர்மாற்றா விரியலாக்கி
2) நேர்மாற்றும் விரியலாக்கி, $\frac{R_2}{R_1}$
3) அழுத்த ஒப்பீட்டு நோக்கி
4) நேர்மாற்றா விரியலாக்கி, $1+\frac{R_2}{R_1}$
5) நேர்மாற்றா விரியலாக்கி, முடிவிலிநயம்


**48.** இலங்கை நியம தனியவத்தை அழுத்தத்தில் தொழிற்படும் மாற்றியின் முதல், துணைச் சுருள்களுக்கு இடையில் 1 : 2 எனும் விகிதத்தில் காணப்படுகின்றது எனில் துணைச் சுருள் அழுத்தம்


1) 115V 2) 230V 3) 23V 4) 460V 5) கூறமுடியாது


**49.** கீழே தரப்பட்டுள்ள சுற்றின் உடைவு அழுத்தம் 0.7V உடைய சிலிக்கனால் ஆன ஓர் வலு இருவாயி பயன்படுத்தப்பட்டுள்ளது பயப்பு அழுத்தத்தினைத் தருவது









1)



2)



3)



4)



5)



**50.** மீடிறன் மட்டிசைப்பில்,

1) மீடிறன் மாறாது
2) வீச்சம், மீடிறன் இரண்டும் மாறாது
3) வீச்சம் மாறாது
4) அவத்தையும் மீடிறனும் மாற்றமடையும்
5) அவத்தை மட்டும் மாற்றமடையும்.

PAPERMASTER.LK

PAPERMASTER.LK

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

## மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.
## Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) முன்னோடிப் பரீட்சை - 2019 ஏப்ரல்
**General Certificate of Education (Adv. Level) Pilot Examination - 2019 April**

பொறியியல் தொழினுட்பவியல் - II
**Engineering Technology - II**

| 65 | T | II |
|---|---|---|

மூன்று மணித்தியாலமும் பத்து நிமிடமும்.
**Three Hours and Ten Minutes**

**வினாத்தாளை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ............................................

**முக்கியம் :**

- இவ்வினாத்தாள் **A,B,C,D** என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- இந்நான்கு பகுதிகளுக்கும் உரிய நேரம் **மூன்று மணித்தியாலங்கள்** ஆகும்.
- **கணிப்பானை பயன்படுத்தமுடியாது.**

**பகுதி A – அமைப்புக்கட்டுரை**

**( பக்கம் 2 – 13 )**

**எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இவ் வினாத்தாளிலேயே** எழுதுக. உமது விடைகளை இவ் வினாத்தாளில் ஒதுக்கப்பட்ட இடத்தில் எழுதுதல் வேண்டும். தரப்பட்டுள்ள இடம் விடைகளை எழுதுவதற்குப் போதியது என்பதையும் நீண்ட விடைகள் எதிர்பார்க்கப் படுவதில்லை என்பதையும் கவனிக்குக.

**பகுதிகள் B,C,D**

**( பக்கம் 13 – 16 )**

கட்டுரை வினாத்தாள் 6 வினாக்களைக் கொண்டுள்ளது இதன் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் குறைந்த பட்சம் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. இதற்காக வழங்கப்படும் தாள்களைப் பயன்படுத்துக. **அளவீட்டு (TDS) தாள்கள் வழங்கப்படும்.**

முழு வினாத்தாளுக்கும் விடை எழுதிய பின்னர் **A,B,C,D** ஒரு விடைத்தாள் போல **பகுதி A மேலே** இருக்கத்தக்கதாக இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்க.

### பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்

| 65 – பொறியியற் தொழினுட்பவியல் II | | |
|---|---|---|
| பகுதி | வினா இல. | புள்ளிகள் |
| A | 1 | |
| | 2 | |
| | 3 | |
| | 4 | |
| B | 5 | |
| | 6 | |
| C | 7 | |
| | 8 | |
| D | 9 | |
| | 10 | |
| மொத்தம் | | |
| சதவீதம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

**குறியீட்டெண்கள்**

| | |
|---|---|
| விடைத்தாள் பரீட்சகர் 1 | |
| விடைத்தாள் பரீட்சகர் 2 | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |
| மேற்பார்வை செய்தவர் | |

PAPERMASTER.LK

## பகுதி A – அமைப்புக்கட்டுரை


**நான்கு** வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

ஒவ்வரு வினாவுக்குமுரிய புள்ளிகள் **75** ஆகும்

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

**01. (a)**

மென்னுருக்கினால் வார்க்கப்பட்ட நகரும் குற்றியொன்றின் மூன்றாம் கோண நிமிர்வரை எறிய முறையில் *1 : 1* என்னும் அளவிடையில் வரையப்பட்ட வரைபடம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. A யினால் காட்டப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்குமாறு அதன் சமவளவெறியத் தோற்றத்தினை வரைந்து முகப்பு நிலைப்படத்தில் காணப்படும் எல்லாப் பரிமாணங்களையும் சமவளவு வரைதலில் குறிக்குக. பயன்படுத்தப்பட வேண்டிய அளவிடை *1 : 2* ஆகும் எல்லா அளவீடுகளும் மில்லிமீற்றரில் தரப்பட்டுள்ளன. (உரு அளவிடைக்கு வரையப்படவில்லை)





**[ 50 புள்ளிகள் ]**

| பரிட்சகர்களின் பயன்பாட்டிற்க்கு | புள்ளி |
|---|---|
| சரியான சமவளவெறிய தோற்றப்படம் | |
| மையப்படுத்தப்பட்ட இடஅமைவு | |
| சரியான அளவீடைக்கு வரைதல் | |
| நியமத்திற்கு ஏற்ப பரிமானங்களைக் குறித்தல் | |
| வரைபடத்தின் தூய்மை | |
| அம்புகுறிகள் இடும் முறை | |

PAPERMASTER.LK

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

**(b)**




1.5 mm தடிப்புள்ள உலோகத்தகட்டில் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பொதியிடல் பெட்டி ஒன்றின் உரு காட்டப்பட்டுள்ளது இப்பெட்டியினை செய்வதற்குத் தேவையான உருவின் விருத்தியை *2 : 1* என்னும் அளவிடைக்கு வரைந்து தேவையான அளவீடுகளை நியம முறைப்படி இடுக.
( விளிம்புகளை இணைப்பதற்கான மூட்டு இளக்கங்கள் விடவேண்டியதில்லை )

**[ 25 புள்ளிகள் ]**

**Q.1**

| |
|---|
| 75 |

PAPERMASTER.LK



[ பக். 6 ஐப் பார்க்க

PAPERMASTER.LK

| | | | | |
|---|---|---|---|---|
| பதார்த்தம்: மென்னுருக்கு | | திகதி: | பெயர்: | சேரன் பொறிச்சாலை மல்லாவி |
| | வரைந்தவர்: | 2019.04.25 | சேரலாதன் | |
| | பரீட்சித்தவர்: | 2019.05.05 | இளமுருகன் | |
| அளவுத்திட்டம்: 1 : 2 | மென்னுருக்கு நகரும் குற்றி | | | வரைதல் இல: ET/65/05 |

[ பக். 4 ஐப் பார்க்க

**வினா இல *1.* (b) இற்கு உரியது**

PAPERMASTER.LK

**02.** திரு. சு. கணேஸ் என்பவர் வாகன கழுவும் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டு காணி ஒன்றினைக் கொள்வனவு செய்கின்றார்.

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

(a) இக் காணியின் வரைபடத்தினைத் தயாரிப்பதற்கு நில அளவையாளர் ஒருவரை நாடுகின்றார். அவர் சங்கிலி அளவீட்டினைப் பயன்படுத்தி நிலஅளவை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

i. இவ் அளவீட்டில் பயன்படுத்தப்படும் முக்கிய உபகரண, பொருட்ப்பட்டியல் 5 இணைத் தருக?

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

3. ..........................................................................................................

4. ..........................................................................................................

5. ..........................................................................................................

**[ 4 புள்ளிகள் ]**

ii. $200m^2$ பரப்புக் கொண்ட வாகனக்கழுவுமிடம் ஒன்று 1 : 200 என்னும் அளவீட்டில் வரைபடம் வரையப்படுகின்றது எனில் வரைபடத்தில் அதன் பரப்பளவு யாது?


..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**[ 4 புள்ளிகள் ]**

iii. கீழே ABCD இனால் காட்டப்படுவது அவ் வளவில் காணப்படுகின்ற கட்டிடத் தொகுதியின் புலக்குறிப்புப் படமாகும். இக் கட்டிடத்தொகுதியினை அலுவலகமாக மாற்ற எண்ணியுள்ளார், எனின் அலுவலகத்தின் பரப்பளவினைக் கான்க?..........................................




..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................


..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**[ 10 புள்ளிகள் ]**

(b) கணேஸ் தனது அலுவலகத்திற்கு வளிச்சீராக்கியினைப் பொருத்துவதற்கு எண்ணியுள்ளார்




PAPERMASTER.LK



[ பக். 6 ஐப் பார்க்க

i. மேலே காட்டப்பட்டுள்ள வளிச்சீராக்கியின் பகுதிகள் A,B என்பவற்றினுள் எப்பகுதி கட்டிடத்தினுள்ளும், எப்பகுதி கட்டிடத்தின் வெளியிலும் பொருத்தப்பட வேண்டும் எனக்கருதுகின்றீர்?

கட்டிடத்தினுள் : ..........................................................................................................

கட்டிடத்திற்கு வெளியே : ..........................................................................................

**[ 4 புள்ளிகள் ]**

ii. பின்வரும் ஒவ்வொரு பகுதியினதும் தொழிற்பாட்டினைத் தருக?

நெருக்கி : ..........................................................................................................

ஆவியாக்கி : ......................................................................................................

ஒடுக்கி : ............................................................................................................

விரிவால்பு : .......................................................................................................

**[ 8 புள்ளிகள் ]**

iii. வளிக்குளிரேற்றல் தொகுதியில் பின்வரும் நிகழ்வுகள் நிகழ்வதற்கான காரணங்களைத் தருக?

*1.* அறை உட்புற வெப்பநிலை குறைதல் :

..........................................................................................................................

..........................................................................................................................

*2.* அறையின் வெளிப்புற வெப்பநிலை அதிகரித்தல் :

..........................................................................................................................

..........................................................................................................................


*3.* நீர் வழிதல் குழாயினூடாக நீர் வழிதல் :

..........................................................................................................................

..........................................................................................................................

**[ 9 புள்ளிகள் ]**

(c) உமது பாடசாலையின் மலசலகூட கழுவல் செயற்பாட்டிற்கு கொங்கிறீற்றிலான சேமிப்புத் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டு அதனுள் நீர் சேமிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.




i. இங்கு அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கியின் அமைப்பு வேலைக்கு உம்மால் சிபார்சு செய்யக்கூடிய மீள்வலுவூட்டல் கொங்றீட்டின் தரத்தினைக் குறிப்பிடவும்? **[ 2 புள்ளிகள் ]**

..........................................................................................

ii. கொங்கிறீற்றினால் அமைக்கப்பட்டுள்ள நீர் தொட்டிக்கு உம்மால் சிபார்சு செய்யப்படக்கூடிய கொங்கிறீற்றின் கலவை விகிதம் யாது? **[ 2 புள்ளிகள் ]**

..........................................................................................

iii. படத்தில் சேமிப்புத் தொட்டியிற்கான நீரைப் பம்பும் செயன்முறை காட்டப்பட்டுள்ளது.

*1.* இங்கு உறிஞ்சல் தலையின் (Suction Head) நீளம் யாது? **[ 2 புள்ளிகள் ]**

..........................................................................................................

PAPERMASTER.LK



[ பக். 7 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

2. வழங்கல் நீளம் (Delivery Length) யாது?

**[ 2 புள்ளிகள் ]**

……………………………………………………………………………………………

3. வழங்கல் தலை (Delivery Head) இன் நீளம் யாது?

**[ 2 புள்ளிகள் ]**

……………………………………………………………………………………………

4. படத்தில் A,B,C இனால் குறித்துக்காட்டப்பட்டுள்ள பகுதிகளை இனங்காண்க

A : ……………………………………………………………………………………

B : ……………………………………………………………………………………

C : ……………………………………………………………………………………

**[3 புள்ளிகள் ]**

iv. பாயியினைப் பம்புவதற்கு ஆடுதண்டுவகைப் பம்பியிலும் பார்க்க மையநீக்கப் பம்பிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகைப் பம்பிகளை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் இரண்டினைத் தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

**[ 4 புள்ளிகள் ]**

(d)

i. தனிக்கலை மின்சுற்று ஒன்றில் 2500W வலுவுடைய மோட்டார் பொருத்தப்பட வேண்டும் எனில் இதற்குப் பொருத்தவேண்டிய MCB இன் இழிவுப் பெறுமானம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

**[ 4 புள்ளிகள் ]**

ii. முக்கலை நழுவல்வலயக் கம்பியால் சுற்றப்பட்ட தூண்டல் மோட்டரிலும் பார்க்க அணில்கூண்டுத் தூண்டல் மோட்டார் கொண்டிருக்கும் அனுகூலமான இயல்புகள் நான்கினைத் தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

**[ 4 புள்ளிகள் ]**

iii. நான்கு முனைகள் கொண்ட 50 Hz இல் தொழிற்படும் முக்கலை அணில்கூண்டுத்தூண்டல் மோட்டார் ஒன்றின் சுழல்வன் 1000 rpm வேகத்தில் சுழல்கின்றது எனின் இதன் நழுவல் வேகம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

**[ 7 புள்ளிகள் ]**

(e)

i. வாகனம் கழுவும் தொழிற்சாலை ஒன்றில் வேலைசெய்யும் தொழிலாளர் அணிந்திருக்கவேண்டிய பாதுகாப்பு அணிகலன்கள் யாவை?

……………………………………………………………………………………………

PAPERMASTER.LK

……………………………………………………………………………………………

**[ 2 புள்ளிகள் ]**



